புதிய பத்திரிகைச் சட்டம்
பதிவுபெற்றது.

இந்துசாதனம்.

விரோதி௵ (1889)
ஆவணி௴ உதயம்

பத்திரக் கிரயம்.		
யாழ்ப்பாணப் பட்டினம்:	ஞூ 1-க்கு ரூ.	5-60
வெளியூர், இந்தியா:	,, ரூ.	9-40
தொலைவாய்ப்பகுதி:	,, ரூ.	9.40
தனிப்பிரதி:		சதம் 6

முற்பணம் அனுப்புவோருக்கே பத்திரிகை அனுப்பப்படும்.

THE HINDU ORGAN.

சோமவாரத்திலும், குருவாரத்திலும் பிரசுரமாகும்.

"எனைத்தானு நல்லவை கேட்க வனைத்தானு, மான்ற பெருமை தரும்."

விளம்பர விகிதம்.		
முதன் முறைக்கு:—	ஒருகலம்	ரூ. 9-40
,,	அரைக்கலம்	ரூ. 5-00
,,	கால்கலம்	ரூ. 3-15
,,	ஒரு அங்குலம்	சதம் 65

அடுத்த முறைகட்கு டெ விகிதங்களிற் பாதி விளம்பரங்கள் முற்பண மனுப்பினலன்றி கவனிக்கப்படா

புத்தகம்—ருக. யாழ்ப்பாணம்:—விபவஞு சித்திரைமீ உடுவ; (1928 மேமீ 7) திங்கட்கிழமை. இலக்கம்—அரு.

உ
கணபதிதுணை.

சீர்பூத்த கருவிநா லுணர்ச்சி தேங்கச்
சிவமபூத்த நிகமாக மங்க ளோங்கப்
பார்பூத்த புறச்சமய விருள்க ணீங்கப்
பரமபூத்த சைவநிலை பாரோர் தாங்கப்
பேர்பூத்த சிவானந்தத் தினிது தூங்கப்
பிறைபூத்த சடைமவுலிப் பிரானுர்தந்த
வார்பூத்த வழிவிச்சை தொழிலெனறேறு
மதம்பூத்தவி நாயகன்றுள் வணங்கிவாழ்வாம்.

வாழ்க வந்தணர் வானவரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்க்கவே.

சாலாமிஸ்திரி லேகியம்.

இந்த லேகியத்தை யான் அநேக பிரபுக்களுக்குச் செய்து கொடுத்துப் பல வியாதிகளைக் குணப்படுத்தியதால அவர்கள் மனமகிழ்ந்து வெகுமதிகளையுங் கொடுத்திருக்கிறார்கள். இதை கான விளம்பரத்தில உலககன்மைககாகப் பிரசுரித்திருக்கிறேன். ஆனால் பிரபுக்கள் மாத்திரமல்ல ஏழைகளும இதனாலுண்டாகுஞ் சுகத்தை அடையும்படி பொதுஜன கலத்தைக்கருதியே இப்போதுஇந்த லேகியத்தைப்பற்றிப் பிரசுரித்து வருகிறேன்.

இது சாலாமிஸ்திரி, குங்குமப்பூ, சிலாஜித், கஸ்தூரி, குமாஸ்தாகா, பிதாளு, சாலாமுஸ்லி, சப்பேமுத்ஸ்லி, பிஸ்தாலை, சார்ப்பருப்பு,. பாதமபருப்பு, சாத்தாவாரி, கீர்முள்ளிவிதை, நாகபூ வங்கபஸ்பம், அப்ரக்பஸ்பம, பவளப்பஸ்பம, வெள்ளிபஸ்பம், அயகாந்த செந்தூரம் சாம்பிராணிப் பதங்கம் இன்னும் அநேக புஷ்டியான மூலிகைவகைகள் சேர்த்துச் செய்யப் பெற்றிருக்கின்றது.

இதனுல் கீரிழிவு, நீர்க்கடுப்பு, நீரடைப்பு, மூலச்சூடு, ஒருவருஷத்துள் உண்டாயிருக்கும் பக்கவாய்வு, இருமல், காசம் பித்தகாமாலை, பித்தபாண்டு, பீனிசம, கைகால் காந்தல் வலி, இடுப்புவலி, பக்கவாய்வு இன்னும் அநேக கடுமையான வியாதிகள் நிரும். ஸ்திரீகள் இந்த லேகியத்தைச் சாப்பிட்டுவந்தால், மேற்சொல்லிய வியாதிகள் சுகமடைவதுடன சூதக வாய்வு, பிரசவ அறையில் உண்டாகும் நோய்கள் தீர்ந்து தேகபுஷ்டியும் பலமும் பெறுவார்கள். பால் விருத்தியாகும்.

இந்த லேகியத்தின் விலை ரூத்தல் ஒன்றுக்கு ரூபா ௨௦. அரைரூத்தலுக்கு ரூபா க௦. கால் ரூத்தலுக்கு ரூபா ரு. தபாற்செலவு பிரத்தியேகம்.

சிங்கப்பூர் பினங்கு முதலிய தொடுவாவிராச்சியப்பகுதிக்கு வீ. பி. சட்டம் இல்லாததினுல் முன்மனி ஆடர் அனுப்புதல் வேண்டும்.

இங்ஙனம்,
க. ஆறுமுகம்பிள்ளை,
சிவஞான ஆரோக்கியசுகாதாரவைத்தியசாலை
காத்தான்குடி போஸ்று,
மட்டுக்களப்பு,
சிலோன்.

(M. 36.)

கௌரவ ஸேர் பொன் இராமநாதனவர்கள் இயற்றிய நூல்கள்.

1. செந்தமிழ் இலக்கணம் முதற்பாகம் (எழுத்ததிகாரமும் சொல்லதிகாரமும்) நன்னூற் சூத்திரங்களைத் தழுவி இலகுவான உரைநடையில் இயற்றப்பெற்றது. 545 பக்கங்கள் கொண்டது. உயர்ந்த பதிப்பு ரூபா 3-00. சாதாரண பதிப்பு ரூபா 2 அணு 8.
2. பகவத்கீதா — தமிழ் மொழிபெயர்ப்பும் விருத்தியுரையும் 517 பக்கங்கள் கொண்டது ரூபா 2-00.
3. திருக்குறள் பாயிரமும் இராமநாதீயம் என்ற விருத்தியுரையும் 143 பக்கங்கள் கொண்டது ரூபா 1-00.

மானேஜர்,
இராமநாதன் கல்லூரிப் புத்தகசாலை,
சுன்னுகம், யாழ்ப்பாணம்.
(H. 61)

ஜாதக விளம்பரம்.

ஜாதகபலன் அறியவிரும்புவோர் ஜாதகக் குறிப்பையாவது, அல்லது பிறந்த வருஷம், மாதம், திகதி, கிழமை, நேரம், ஆண், பெண், பிறந்த ஊர் இவைகளைத் தெளிவாக எழுதி அனுப்பித் தற்கால பலன் அறிய ரூபா 1—00

ஜாதகக் குறிப்புக்கள் ரூபா 1, 2, 7, வரையிலும், ஜாதகங்கள் 10 ரூபாய் முதல் 150 ரூபா வரையிலும் எழுதிக்கொடுக்கப்படும்.

[illegible] சொல்வோம. கடித மூலமாய் அறிய விரும்புவோர் கடிதம் எழுதும் நேரத்தைக் குறிப்பிட்டு எழுதவும், மூன்றுகேள்விகளுக்குட்பட ரூபா 1. மேற்பட்ட ஒவ்வொருகேள்விக்கும் சதம் 25 (அணு 4.)

மற்றும் விபரங்கள் கடித மூலமாயறிந்து கொள்ளலாம். பதில் வேண்டுவோர் முத்திரை (ஸ்டாம்பு) அனுப்புதல் வேண்டும்.

விலாசம்:—
க. கனகசபை.
சோதிடர்,
அன்னசத்திரத்தடி,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.
(Q. 101.)

திருவாலங்காட்டுத் தேர்த் திருப்பணி.

———:0:———

மூர்த்தி தலம் தீர்த்தம் வாய்ந்ததும், பஞ்ச சபைகளுள்ளே ரத்தினசபையை உடையதும், சமயகுரவர், காரைக்காலம்மை, அருணகிரிநாதர், பட்டணத்தடிகள் முதலிய மகான்களின் பாடல் பெற்றதும ஆகிய திருவாலங்காடென்னும் வடாரணிய க்ஷேத்திரத்திலே நெடுநாள் ரதமின்றியிருந்தமையால், திருவருளை முன்னிட்டு ஓர் ரதத்தை நூதனமாயமைக்க ஆரம்பித்து இலங்கைவாசிகள் உபகரித்த பணத்தைக்கொண்டு அத்தேசத்திலுள்ள அருமையான மரங்களும் சிமை இருசு (அச்சு) களுந் தருவித்து, இதற்கென அமைக்கப்பெற்ற தகரக் கொட்டகையிலே, பிரபவஞு கார்த்திகைமீ ௧௨உ நிகழ்ந்த சுபதினத்திலே முகூர்த்தஞ்செய்து இதுவரை சதுரப்பட்டடை மட்டம் வேலை நிறைவேறிவருகிறது. இத்திருப்பணி நன்கு பூர்த்தியாக இன்னும் நாற்பதினுயிரம் ரூபா வரையில வேண்டியதாயிருப்பதால் சிவநேயச் செல்வர்களனைவரும் தங்கள் தங்களாலியன்ற பொருளுதவி இத்திருப்பணியை இனிது முற்றுவித்து வடாரண்யேஸ்வரப்பெருமானாது திருவருளைப்பெறும்வண்ணம் வேண்டுகிறோம்.

இங்ஙனம்,
சச்சிதாநந்தராஜயோகி,
(T S W Y.Swamy.)

திருவாலங்காடு(போஸ்ற்)
விபவஞுசித்திரைமீ ௩உ
(Q.102.)

பரராச சேகரம்.

எனப்படும் அரிய பெரிய வைத்திய நூல் சஞ்சிகை வடிவமாக வெளியிடப்படுகின்றது. ஆண்டுக் கையொப்பம் ரூபா 4—00. வேண்டுவோர் அடியிற் கண்ட விலாசத்திற்கு எழுதிப் பெற்றுக் கொள்க.

அ. பொன்னையா,
வைத்தியர்,
ஏழாலை.
(M. 61) Chunnakam Post.

வெற்றிலை! வெற்றிலை!! வெற்றிலை!!!

வியாபாரிகளே! உங்களுக்கு வெற்றிலை தேவையானுல் கீழ்க்கண்ட விலாசத்திற்கு உடனே எழுதுங்கள். இலங்கையிலுள்ள மிகவுந் திறமான வெற்றிலை இங்கே மிக மலிவான விலைக்குக் கிடைக்கும். எந்தத் தினிசான வெற்றிலையும் இலங்கையிலுள்ள எந்த இடங்களுக்கும் புகைரதமூலமாக எப்பொழுதும் அனுப்பலாம். விசேஷமாகக் கலியாணவீடு மற்றுங் கொண்டாட்ட தினங்கள் முதலியவற்றிற்கு வெற்றிலை அனுப்புவதற்கு எப்பொழுதும் ஆயத்தமாக விருக்கிறோம். சென்ற 36 வருஷங்களாக இலங்கையிலுள்ள பல பாகங்களிலும் மிகவும் திருப்திகரமான வியாபாரஞ் செய்திருக்கிறோம்.

எமது விலாசத்திற்கு ஒரு தந்தி மனி ஓடர் சமீபமான புகைரதஸ்தானத்தைக் குறிப்பிட்டனுப்பினுல் அடுத்த புகைரத மூலமாகவே வெற்றிலை யனுப்புவோம். அயலூர்களுக்கே எந்தக்காலமும் நாங்கள் வெற்றிலை அனுப்பிப் பெரிய வியாபாரஞ் செய்துவருகிறோம். ஒருமுறை எங்களிடத்தில் நீங்கள் வெற்றிலை வாங்கினுல் பின் வேறேரிடத்திலும் வாங்க மாட்டீர்கள். இது திண்ணம்! எங்கள் தந்திவிலாசம் ஆக இரண்டு சொற்களே யுடையன.

மற்றும் விபரங்களுக்கு எழுதவும்.

S. P. A. மகிறிஸ் அப்புகாமி,
கம்பகா.
S. P. A. Magiris Appuhamy,
Gampaha - W. P.

தந்தி விலாசம்:—
மகிறிஸப்புகாமி,
கம்பகா.
Tel. Add:—"Magrisappuhamy",
(H. 62) Gampaha.

வியாபாரத்தில் விர்த்தியடைய விருப்பமா?

இந்தப் புத்தகத்தை வாசியுங்கள்.	ஒவ்வொரு வியாபாரியும் தொழிற்சாலை அதிபரும் முதலாளியும் தங்கள் தங்களுக்கு உகந்தபடி விளம்பரவழியைத் தேடிக் கொள்ளவும், அதின்படி சுருக்கமான செலவில் சிறந்த விளம்பர சகாயத்தைப் பெற்று வியாபார விர்த்தியை யடையவுந் துணையான நூல்.

வியாபார விர்த்தி விளம்பர யுக்தி.

தமிழில்முதற்பதிப்பு விலைரூபா 1 தபாற்கூலி அணு 4 முற்பணம்அனுப்புக.	தமிழில் இதுவரை வெளிவராத அரிய நூதன விளம்பர விஷயங்களைத் தாங்கிவரும், நவீன விளம்பர வித்தை விற்பன்னர் ஒருவரால் இனிய எளிய தமிழில் எழுதப்பட்டது. 6¼×4¼ அங்குல அளவுள்ள 200 பக்கங்கள், அழுத்தமான காகிதப் பதிப்பு வைகாசி மாதம் வெளிவரும்.

Modern Publicity Company.
மாடர்ன் பப்ளிசிடி கம்பெனி,
15 அரண்மனைக்காரத்தெரு,
சென்னபட்டினம்.
(Q. E. X.)

தங்கப்பவுண் அடையாள மிடப்பட்ட கொளுக்கி ஓடுகள்.

இலங்கையில் இதுவே திறமான ஓடாக மதிக்கப்பட்டுவருகிறது. இது மிக உரமானது; நீடித்திருக்கத்தக்கது; அழகானது; எல்லாரும் இதனையே விரும்புகிறார்கள்.

காரணம்:

இந்தச்சாதி ஓடுகளின் விசேஷம் அநுபவத்திற் கண்டது. இந்த ஓட்டை நாங்கள் இங்கே தருவித்தபின் இதனை எல்லாரும் வாங்கி உபயோகிக்கின்றனர். ஒருமுறை வாங்கி உபயோகித்துப் பாருங்கள். ஓடுகள் யாழ்ப்பாணம் பெரிய கடையிலுள்ள எங்கள் பண்டசாலையிலும், பருத்தித்துறையிலுள்ள எங்கள் பண்டசாலையிலும் பெற்றுக்கொள்ளலாம்.

S. வீரகத்திப்பிள்ளை,
தொண்டமானுறு.
(Q. 100)

சமய சந்தேகம் ஏன்?

இந்தியாவிலும் மற்றுங் கீழைத்தேசங்களிலுமுள்ள அநேகர் உபாதைப்படுகின்றார்கள்.

ஏனெனில் அநேகமான மருந்துகளில் மிருகக்கொழுப்புச் சேர்த்திருப்பதால் அவர்கள் அதைப் பயங்கரத்தோடு வெறுக்கின்றார்கள்.

மிருகக்கொழுப்புச் சிறிதுஞ் சேராத
லிட்டில்ஸ் ஓரியண்டல் பாம்
என்னும் மருந்தினுல் உண்மையான சுகத்தை யடையலாம்.
இந்துக்களாயினுஞ்சரி மகமதியர்களாயினுஞ்சரி
கிறீஸ்தவர்களாயினுஞ்சரி புத்தர்களாயினுஞ்சரி எல்லோரும் நம்பிக்கையோடு உபயோகிக்கலாம்.

எவ்வித வலிப்பையும் நோவையுந் தீர்ப்பதற்கு இந்தியாவில்கைகண்ட மருந்து.

எல்லாரசாயனசாலைகளிலும் மருந்துக்கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

(Y. 51.)

இந்துசாதனம்.

யாழ்ப்பாணம் விபவ௵
சித்திரை௴ ௨௫ திங்கட்கிழமை.

தேசத் துரோகிகளின் செயல்.

—:o:—

தென்மராட்சியிலும் யாழ்ப்பாணப் பட்டினம் வண்ணார்பண்ணை என்னுமிடங்களிலும் வசிக்குஞ் சில பாவிகள் தங்களுக்குப் பழையபடி கள்ளுக்கடைகள் வேண்டுமென்று அரசினருக்கு மனுப்பண்ண, தொட்டிலையும் ஆட்டிப் பிள்ளையையும் கிள்ளிவிடுவோர்போல் அரசினர் அதற்கு உடன்பட்டுச் சனச்சம்மதம் பெறுதற்காகிய காலத்தையும் இடத்தையும் விளம்பரஞ் செய்திருக்கின்றனர். இங்குள்ள தேசாபிமானிகள் மதுபானத்தை இந்த நாட்டிலிருந்து ஓட்டிவிடுதற்குப் பட்ட சிரமமும் செலவிட்ட பணமும் கொஞ்சமல்ல. இப்படிப் பாடுபட்ட அபிமானிகள் யாழ்ப்பாணத்திற் பேரளவிலாயினும் மதுபானம் முற்றாக வில்லையென்று மற்றையூரார் சொல்லக் கேட்டுச் சில காலம் மகிழ்ச்சியடைந் திருந்தனர் இதற்கிடையில் குறித்த தேசத்துரோகிகள் மானம் மரியாதை நாணம் என்னுமிவைகளின்றித் தமக்குத் தீமைபயப்பதை நன்மைபயப்பதென விபரீதமாக விளங்கி இப்பொழுது, முன்னிருந்தபிரகாரம் கள்ளுத் தவறணைகள் தங்களுக்கு வேண்டுமென்று நிற்கின்றார்கள். மதுவிடாய்கொண்ட இவர்கள், யாழ்ப்பாணத்திலே மற்றைய பாகங்களில் இருப்போரின் பெருந்தன்மையையாயினும் பார்க்கவில்லையா? வடமராட்சி வலிகாமப்பகுதிகளிலும் மதுபானஞ் செய்து இப்பொழுது விட்டவர்கள் இருக்கின்றார்களல்லவா, அவர்கள் தங்களுக்குப் பழையபடி கள்ளு வேண்டுமென்று கேட்கவில்லை, காரணமென்ன! தாம் மதுபானஞ் செய்துவந்த துண்மையாயினும், மதுபானம் தமக்கும் பிற்சந்ததியார்க்கும் தேசத்திற்கும் சமயத்திற்கும் தீமைபயப்பதென்பதை அவர்கள் உள்ளபடி உணர்ந்துகொண்டமையேயாகும். அவர்கள் எநாளும் இந்த மேலான கொள்கையுடனிருப்பார்களாக,

நிற்க, குறித்த தென்மராட்சிப்பகுதியிலும் வண்ணார்பண்ணை பட்டினப்பகுதிகளிலும் கள்ளுக்கடைகள் வேண்டுமென்று நிற்பவர்களைக்காட்டிலும் வேண்டியதில்லையென்னுங் கொள்கை யுடையவர்கள் இருமடங்கினரெனச் சொல்லலாம். ஆதலால் இப்பொழுதும் இக்குடியர் தாம் எடுத்துக்கொண்ட கருமத்திற் செயமடைவரோ வென்பது சந்தேகம்.

நமது மதுநீக்க அபிமானிகளும் மற்றும் அபிமானிகளும் பழையபடி மதுக்கடைகள் வருதற்கான முயற்சி தொடங்கிக் கொண்டார்களே, நாம் எத்தனைமுறையென்று மாரடிப்பது என வெண்ணி மனந்தளர்ந்து முயற்சியின்றிச் சும்மாவிருக்கக் கூடாது. நோய் மறுதலித்துவந்தாலும் வைத்தியர்கள் அந்நோய்க்கு வைத்தியஞ் செய்யாமல் விடுவதில்லை, நன்மையான கருமங்களுக்கு இடையிடையே இடையூறுகள் நேர்வது சகசமாகும். இந்த நன்மையான விஷயத்தில் குறித்த தென்மராட்சி வண்ணார்பண்ணை பட்டினப்பகுதி என்னுமிடங்களில் வசிக்கும் அபிமானிகள்மாத்திரம் வேலைசெய்தாற் போதுமென்றெண்ணாது யாழ்ப்பாணப்பிரிவு முழுவதிலும் இருக்கும் மதுநீக்க அபிமானிகள் ஒத்துழைத்து இத்தீமை இரண்டாம்முறைதலையெடுக்கவொட்டாது தடுத்துவிடுதல்வேண்டும். எங்காயினும் ஒரு இடத்திற் கள்ளுத் தவறணை திறக்கப்படுமானால் யாழ்ப்பாணத்தின் மரியாதை கெட்டது என்றே நாம் நிச்சயித்துக்கொள்ளவேண்டும். குறித்த தென்மராட்சிப்பகுதியிலும் வண்ணார்பண்ணை யாழ்ப்பாணப்பட்டினம் என்னுமிடங்களிலும் வசிக்கும் அபிமானிகள் அங்கங்குள்ள பாமரசனங்களுக்கிடையே சென்று மதுவேண்டாமென்று முந்தியே பிரசங்கஞ் செய்தும் துண்டுப் பத்திரங்களை அச்சிட்டு வெளியிட்டும் அச்சனங்கட்குப் போதித்தல்வேண்டும்

பதினெண் புராணம்.

—:o:—

> “எதிரில்சைவமேபவிடியம்மார்க்கண்டமிலிங்கம், மதிகொள் காந்தம் வராகமே வாமனம் மற்றும், புதிய கூர்மமே பிரமாண்ட மிவை சிவபுராணம், பதுமமேலவன் புராணமாம் பிரமமே பதுமம்.”
>
> “கருடு காருடம் நாரதம் விண்டுபா கவதம், அரிக தைப்பெய ராக்கினே யம்மழற் கதையாம், இரவி தன்கதை பிரமகை வர்த்தமாமிவைதார், தெரியு மொன்பதிற் றிருவகைப் புராணமாந்திறனே.”

என்றபிரகாரம் பதினெண் புராணங்களுட் சிவபிரானுக்குரிய புராணங்கள் 1. சைவம், 2. பவிடிகம், 3, மார்க்கண்டேயம், 4. இலிங்கம், 5. காந்தம், 6. வராகம், 7. வாமனம், 8. மற்சம், 9. கூர்மம், 10. பிரமாண்டம் என்பனவாம். பிரமாவுக்குரிய புராணம் பிரமம், பதுமம் என்னுமிரண்டுமாம். விஷ்ணுவுக்குரிய புராணம் காருடம், நாரதீயம், வைணவம், பாகவதம் என்னும் நான்குமாம். அக்கினிக்குரிய புராணம் ஆக்கேயம். சூரியனுக்குரிய புராணம் பிரமகைவர்த்தம்.

இவைகளுள் சிவபுராணம் இருபத்துநாலாயிரங் கிரந்தங்களையுடையது. வித்தியேசுவரசங்கிதை, ருத்திரசங்கிதை, விநாயகசங்கிதை, உமாசங்கிதை, மாதிருசங்கிதை, ஏகாதசருத்திரசங்கிதை, கைலாசசங்கிதை, சதருத்திரசங்கிதை, கோடிருத்திர சங்கிதை, சகஸ்திரகோடிருத்திரசங்கிதை, வாயுசங்கிதை, தருமசங்கிதை எனப் பன்னிரு சங்கிதைகளைக் கொண்டுள்ளது. சிவலிங்கத்தினின்றும் எவையும் உற்பத்தியாதல் சிவலிங்க வழிபாடு, புண்ணியகாலம், புண்ணியக்ஷேத்திரதீர்த்தங்கள், சரியை முதலாம் பாதங்கள் உருத்திரர்களின் இலக்கணம் விநாயகர் தேவி சுப்பிரமணியர் முதலாம் மூர்த்திகளின் மகத்துவம், பாவபுண்ணியம் என்னுமிவற்றை இப்புராணம் விரித்தெடுத்துக் கூறும்.

2. பவிடியபுராணம் முப்பத்தோராயிரம் கிரந்த முடையது; உலக வரலாற்றைக் கூறுவது. சர்வபூத இலக்கணம் நீதி ஆதித்தியமான்மியம் உலக முண்டாகும் முறை சிருட்டிபேதம் முதலானவற்றைக் கூறுவது.

3. மார்க்கண்டேய புராணம்; இது மார்க்கண்டேய முனிவருக்கு உபதேசிக்கப்பட்டது. முப்பத்திராயிரங் கிரந்தங்களையுடையது. விஷ்ணுமூர்த்தி மானுடவடிவெடுத்தகாரணம பாண்டவருக்குத் திரௌபதியொருத்தியே மனைவியான காரணம பலராமர் மதுவுண்டு மயங்கிய வரலாறு முதலிய வற்றை எடுத்துக் கூறுவது.

4. இலிங்கபுராணம்; இது சிவலிங்கத்தின் மகத்துவத்தை உணர்த்துவது. பதினோராயிரங் கிரந்தங்களையுடையது. சிவபிரான் சிவலிங்கத் திருமேனியினின்றுந் தோற்றி, தர்மார்த்த காமம் மோட்சமென்னும் நான்கினையும் விரித்துக் கூறியவரலாற்றைச் சொல்வது. துருவன் சூரியன் முதலியவர்களின்நிலை, அசபாரமபரியம விரதம் நித்திய கர்மம் திரிபதார்த்த உண்மை தானமுறை என்னுமிவைகளை விரித்துரைப்பது.

5. காந்தபுராணம்: இது ஒரு லக்கம் கிரந்தங்களையுடையது, சனற்குமாரசங்கிதை, பிரமசங்கிதை, விஷ்ணு சங்கிதை, சங்கர சங்கிதை, சூதசங்கிதை என ஆறுசங்கிதைகளையுடையது. அறம்பொருளின்பம் வீடு என்னும் புருஷார்த்தங்களைத் தாவல்ல திவ்விய சரித்திரங்களையெடுத்துச் சொல்வது. கலியுகத்திலே பெரிதுங் கைக்கொள்ளப்படுவது. கடல்போற் பரந்து பல சரித்திரங்களை விரிவாகவும் குறிப்பாகவும் எடுத்துக் கூறுவது. இக்காந்தபுராணத்துள்ள சங்கரசங்கிதை பன்னிரு கண்டங்களுள் ஒன்றாகிய சிவரகசிய கண்டத்தையே கச்சியப்ப சிவாசாரியர் கந்தபுராணமாகவும் அவரது மாணாக்கராகிய கோனேரியப்பமுதலியார் உபதேசகாண்டமாகவும் தமிழிற் தொடர்புபடப் பாடியுள்ளார்கள். கந்தபுராணத்தின் பெருமையை இந்நாட்டிலுள்ள சைவசன்மக்கள் எவருமறிவர்.

6 வராகபுராணம்: வராகாவதாரங் கொண்ட திருமால் பூமிதேவிக்கு உபதேசித்த வரலாற்றையுடையது. இருபத்துநாலாயிரங் கிரந்தங்களையுடையது. இரணியன் இரணியாக்கன் முதலியோர் திருமாலினாற் கொல்லப்பட்டமை முதலாம் வரலாற்றைக் கூறுவது. (வரும்).

யாழ்ப்பாணம் ஆரியதிராவிட பாஷாபிவிருத்திச் சங்கம்.

யா. ஆ. தி. பா. வி. சங்கத்தாரால் நடத்தப்படும் பரீட்சைகள் நிகழும் மே௴ 28-ம், 29-ம், 30-ம் தேதிகளில் யாழ்ப்பாணம் சுன்னாகம், கோப்பாய், மட்டக்களப்பு, கொழும்பு என்னும் 5இடங்களிலும் நடைபெறும்.

மதுபரிபாலனப் பகுதியாரின் புதிய முயற்சி.

மது பரிபாலனப்பகுதியார் பொலிஸ் ஸ்தானம் போன்ற ஸ்தானங்களை வேண்டுமிடங்கடோறும் ஸ்தாபித்து அவைகளிலே பரிசோதகர்களையும் சேவகர்களையும் இருத்துவதற்குத் தீர்மானித்திருக்கிறார்களென அறிகிறோம். தற்போது பரீட்சையளவிற் களுத்துறை டிஸ்திரிக்கிலே இரு ஸ்தானங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன.

கஞ்சா வைத்திருந்தமைக்குத் தண்டனை.

மாத்தளையிலே நெடுங்காலமாய் அகப்படாமல் சோரமாய் வீட்டில் அபின் கஞ்சா வைத்து விற்றுவந்த ஒருவன், சில நாட்களுக்குமுன் அகப்பட்டு ரூபா 1000 அபராதம் விதிக்கப்பெற்றான். பரிசோதனையில் 6750 கிறேன் கஞ்சா இவன்வீட்டிற் கண்டெடுக்கப்பட்டதாம்.

பொலிஸ்விதானைக்கு அடித்தமை.

மல்லாகம் பொலிஸ்கோட்டி லிருந்து ஏழாலைப் பொலிஸ்விதானை வீட்டுக்குப் போகும்பொழுது அவ்வூர்வாசியான(செல்லையா) என்பவர் அவருக்குச் செருப்பாலடித்தாரெனவும் குறித்த கந்தையா அடைக்கப்பட்டிருக்கிறாரெனவும் சென்ற பிரசுரத்திற் கூறியிருந்தேம். விதானைக்கு அடித்த வழக்குச் சென்ற 5௨ மல்லாகம பொலிஸ்கோட்டில் விளங்கப்பட்டதும் நீதிபதி அடித்தவருக்கு 4 மாதக் கடூழியச்சிறை விதித்தனர்.

கள்ளக் கையொப்ப மிட்டவருக்கு 4 வருஷச் சிறை.

கொழும்பில் ஏ. பி. ஷோ என்னுமொருவர் கள்ளக் கையொப்பமிட்டு ஸ்ரீ வள்ளியப்பசெட்டியாரை அனுப்பி ரூபா 15000 வாங்கினதற்காகத் தொடரப்பட்ட வழக்கு கொழும்பிலுள்ள கிறிமினல் விசாரணைச் சுப்பிறீங்கோட்டில் விளங்கப்பட்டது. எதிரி தன் குற்றத்தை ஒப்புக்கொள்ள நீதிபதி அவருக்கு நாலு வருஷக் கடுங்காவற்சிறை விதித்தனர்.

சர்வகலாசாலை விசாரணைச் சங்கம்.

இலங்கையில் சர்வகலாசாலை ஸ்தாபிக்கும் விஷயமாகச் சட்டநிரூபணசபையிலுள்ள பிரமாணத்திற்கு அமைவாக நியமிக்கவிருக்கும் விசாரணைச் சங்கத்தில் அக்கிராசனம் வகிப்பதற்கு ஒரு கல்விவல்லுநனை இங்கிலாந்தி லிருந்து தெரிந்தனுப்பும்படி அரசினர் குடியேற்றநாடுகளின் மந்திரியைக் கேட்டிருக்கின்றனர்.

இலங்கைத் தீவு.

குமரியாற்றுக்கும் பஃறுளியாற்றுக்கும் இடையில் கிடந்த பழந் தமிழ்நாட்டுடன் இலங்கைத்தீவு ஆதியில் ஒன்றாயிருந்ததாம் தென்பாண்டிநாட்டில் திருநெல்வேலிப்பகுதியில் இப்பொழுது ஓடிக்கொண்டிருக்கும் பொருனை என்ற தாம்பிரபர்ணி ஆறு கடற்கோளுக்கு முன்னர் அக்காலத்தில் இலங்கைக்குஞ் சென்று பாய்ந்துகொண்டிருந்ததாம். அது பெரியதோர் ஆற்றிடைக் குறையாதலின் அதற்கு அலங்க மென்றும் பெயராம். அலங்கமென்றால் ஆற்றிடைக்குறையாம். (அலம் - நதி. பாஞ்சாலம் - ஐந்துநதி) அலங்கம் என்பது லங்கா, லங்கையாயிற்றும். இலங்கைக்கு லற்றின் பாஷையில் Taprobane என்று பெயராம். தாம்பிரபர்ணி என்பது டாப்ரோபேன் என்றாயிற்றும். இது காலஞ்சென்ற பெருந்தமிழறிஞர் மாகறல் கார்த்திகேயமுதலியார் கூற்று.

அநுராசபுரம் நுவரைப்பிள்ளையார்கோவில் வழக்கு.

அநுராசபுரம் டிஸ்திறிக் கோட்டில் அநுராசபுரத்திலுள்ள சின்னக்குட்டி குழந்தைவேலுவாலும் இன்னுஞ்சிலராலும் அவ்விடத்திலுள்ள நுவரைப்பிள்ளையார்கோவிலின் உரிமையைப்பற்றி அக்கோவில் அர்ச்சகராயிருக்கும் கோப்பாய் தெற்கு வேலாயுதக் குருக்கள் திருஞானசம்பந்தக்குருக்களுக்கு விரோதமாக இற்றைக்கு இரண்டு வருஷங்களுக்குமுன் தொடர்ந்த வழக்குச் சென்ற ஏப்பிரல்௴ 30௨ விளங்கப்பட்டு எதிராளிக்கே அக்கோவில் உரித்துள்ளதெனவும், ஆகையால் அருக்குக்கோட்டுச் செலவு வழக்காளிகள் கொடுக்கவேண்டுமெனவும் நீதிபதி தீர்ப்பளித்தனர்.

—கடித.

இறம்புக்கணை ஸ்ரீ கதிர்வேலாயுதசுவாமி ஆலயம்.

இவ்வாலயத்தில், நிகழும் விபவ௵ சித்திரை௴ ௨௯ (11-5-28) வெள்ளிக்கிழமை தொடக்கம், வைகாசி௴ ௮ (20-5-28) வரையும் உற்சவம் நடைபெறும்; கடைசித்தினமாகிய ஞாயிற்றுக்கிழமை பகல் 12 மணியளவில் விசேஷ அபிஷேகமும் அன்னதானமும் அன்றிரவு மகோற்சவமும் அதி விமரிசையாய் நடைபெறும்.

—கடித.

பாலர்ஞானோதய சங்கம்.

இந்தமாசம் ௧௮ (30-4-28) திங்கட்கிழமை சாயந்தரம் 5-30 மணியளவில் ஞானோதய வித்தியாசாலை மண்டபத்தில் பாலர்ஞானோதயசங்க நிருவாகசபை ஸ்ரீ சி. சுவாமிநாதன அவர்களுடைய அக்கிராசனாதிபத்தியத்தின்கீழ் கூடப்பட்டது. அன்று, நடந்தேறிய வருடாந்தக் கூட்டத்தில் அக்கிராசனர் நிர்ணயித்தவாறும் சங்கப் பதினோராம் பிரமாணம் முதலாம் இரண்டாம் பிரிவுகளின்படிக்கும் பஞ்சாயத்தினராகப் பின்வரும் அங்கத்தவர் தெரிவு செய்யப்பட்டனர்.

ஸ்ரீ சி. சுவாமிநாதன் B. A.	மயிலிட்டி
,, க. பரமாதி	மயிலிட்டி தெற்கு
,, க. வேலுப்பிள்ளை	,, ,,
,, சு. செல்லத்துரை	வறுத்தலைவிழான்
,, அ. மாப்பாணர்	கட்டுவன்

அதன்பின் நிர்வாகசபை அங்கத்தவருள் ஒருவராகிய ஸ்ரீ கந்தையா அவர்கள விட்டு நீங்கியமை காரணமாக அவ்விடத்துக்கு ஸ்ரீ க. பொன்னம்பலம் அவர்கள் நியமனம்பெற்றனர்.

—கடித.

காரைநகர்-மேற்கு ஆயிலி சிவஞானோதய வித்தியாசாலைப் பரிசளிப்புக் கூட்டம்.

காரைநகர் மேற்கு ஆயிலிசிவஞானோதய வித்தியாசாலைப் பரிசளிப்புக் கூட்டம் விபவ௵ சித்திரை௴ 17௨ (29—4—28) ஞாயிற்றுக்கிழமை மாலை 6 மணியளவில் திருவாளர் ப. இராசநாயக முதலியார் அவர்கள் அக்கிராசனராயிருக்கத் தேவாரபாராயணத்துடன் தொடங்கியது. மாணவர்களின் கல்வித்திறமை ஒழுக்கம் கிரமம் சமய அறிவு ஆதியவற்றின் திறமைக்கேற்பப் பரிசுகள் வழங்கப்பட்டபின் திருவாளர் சி. ஆறுமுகம் கொத்தாரிஸ் அவர்களால் “கல்வி” யென்னும் விஷயமாய் ஒரு சொற்பொழிவு நிகழ்த்தப்படச் சபையாரிற் சிலர் குறிப்புரை கூறிய பின்னர் ஷை வித்தியாசாலைத் தலைமை ஆசிரியர் ஸ்ரீ மு. இராமப்பிள்ளை அவர்கள் சபையார்க்கு நன்றிகூற 8 மணியளவில தேவாரபாராயணத்துடன் கூட்டம் இனிது நிறைவெய்தியது. கடித.

17 வருஷ காலம் நித்திரை செய்தமை.

உலகில் மிக நீண்ட காலம் உறங்கியவள் ஒரு பிறெஞ்சு ஸ்திரியாம். இவளுக்குத் திடீரென்று நேர்ந்த ஒரு விபத்துக் காரணமாக நினைக்கும் சத்தியையிழந்து 17 வருஷகாலம் இடைவிடாமல் உறங்கிப் பின்னர் எழுந்தனளாம்.

கம்பியில்லாத் தந்தி விசேஷம்.

இராசாங்க திருத்தஞ் சம்பந்தமாய் லண்டன்மாநகரிலே சிறிது நாட்களுக்கு முன்னர் ஓர் விசேஷ கூட்டம் நடைபெற்றது. அதில் உவேல்ஸ் இளவரசர் நீண்ட பிரசாரணஞ் செய்தார். அதைக் கேட்பதற்குத் தென்னாபிரிக்காவிலுள்ள யோகன்ஸ்பேர்க் நகர் இராச தந்திரிகள் ஆவலோடு அங்கு ஓர் மாளிகையிற் குழுமினர். பேச்சு அவ்வளவும் கம்பியில்லாத் தந்திமூலம அவர்களுக்குத் தெளிவாய்ப் புலப்பட்டதாம்.

ஆறுவயதுப் பெண்ணின் துணிவு.

மைசூர்ப்பகுதியில் தாட்பல்லவபுரிஎன்றவூரில் சென்ற மாதத்தில் ஏழைகள் வசிக்கும் பகுதியில் ஒரு குடிசையில தீப்பற்றிவிட்டது. குடிசையில் யாருமிலலை. குடிசை பாதி எரிந்துகொண்டிருக்கையில் பக்கத்தில் விளையாடிக் கொண்டிருந்த ஆறுவயதுப் பெண் குடிசைக்குட் புகுந்து எட்டுவயதுள்ள தனது சகோதரனைக் கொண்டு வந்து வெளியே விட்டாள். பின் ஆறு மாசக் குழந்தையை எடுத்துவந்தாள். ஆயினும் இதனால் பெண்ணுக்கு மிகுந்தகாயங்கள் ஏற்பட்டன. பெண்ணின் துணிவை மெச்சிய பெங்களூர் டிபுடி கமிஷனர் பெண்ணின் குடும்பத்துக்கு ஐந்து ஏக்கர் நிலத்தையும் வேறு சில பொருள்களையும் பரிசளித்திருக்கிறார்.

கடிதர்க்கு விஞ்ஞாபனம்.

கம்பகா ஸ்ரீ முத்துமாரியம்மன் கோவிலைப்பற்றிய விஷயம் தக்க ஆதாரத்தோடு விளம்பரமாகப் பிரசுரிக்கப்படவேண்டியதாம்.

கொள்ளைக்காரர்களைத் தண்டித்தல்.

மெக்சிக்கோவில் கொள்ளைக்காரர்களைக் கண்டவிடத்திற் பிடித்துச் சாலைமரங்களில் தூக்கிவிடுகிறார்கள். பிணங்களைக் கழுகுகள் கொத்தித் தின்கின்றன.

ஆடையின்றி யிருத்தல்.

ஆடையின்றி நிர்வாணமாயிருப்பதே உடலநலத்திற்குப் பொருத்தியதென்ற கருத்துடன் ஜெர்மனி, இங்கிலாந்து முதலிய நாடுகளில் ஒரு கூட்டத்தார் தோன்றியிருக்கிறார்கள். அவர்கள் நகரங்களைவிட்டுக் காடுகளில் வசிக்கிறார்கள். அவர்களுக்கு ஒரு சங்கமும் ஏற்பட்டிருக்கிறது. அந்த சங்கத்தில் ஆண்களும் பெண்களுமாக ஏறக்குறைய இரண்டிலட்சம்பேர்கள் இருக்கிறார்களாம்.

கிறிஸ்தவரொருவர் இந்துவானமை.

கோயம்புத்தூரிலுள்ள இம்பிறியல் வங்கியில் உத்தியோகம்பார்த்த ஜோன் என்பவர் 16 வருஷகாலம் கிறிஸ்தவராயிருந்தார். இப்பொழுது இந்துமதப் பிரவேசஞ் செய்வதற்கு நிச்சயித்தனர். இரண்டுவருஷகாலமாக இந்துமதப் புஸ்தகங்களை வாசித்துக்கொண்டு வந்தனர். ஸ்ரீ R. K. சண்முகம் செட்டியாருடைய இல்லத்தில் ஆரிய சமாஜ முறைப்படி இவர் இந்துமதத்திற் சேர்ந்துகொள்வதற்காகவேண்டிய கிரியைகள் ஏப்பிரல் மாதம் 26-ந் திகதி நடந்தேறின. தமது மனைவியையும் 6 பிள்ளைகளையும் இந்து மதத்திற் சேர்த்துக்கொள்ள அதிக பிரயாசப்பட்டும் அநுகூலமடையவில்லை. இவர்மாத்திரம் இந்துவானார்.

கழுகின் அதிசய மரணம்.

சில நாட்களுக்குமுன் ஜாம்ஷெட்பூரில் ஒரு கழுகு இறந்துபோன ஒரு பசுவைக் கண்டது. இறந்து கிடந்த அப்பசுவின மாமிசத்தை அந்தக்கழுகு கொத்தித் தின்னத் தொடங்கியது. இப்படித் தின்பதில் திருப்தியடையாது அப்பசுவினது திறந்திருந்த அலகுகளுக்கிடையில் நாக்கைக் கொத்துவதற்கு அக்கழுகு தனது நீண்ட கழுத்தைச் செலுத்தியது. அப்பொழுது திறந்திருந்த அலகுகள் உடனே மூடியதும் அப்பட்சியின் கழுத்து அந்த அலகுகளுக்கிடையில் அகப்பட்டுக் கொண்டது. தனது கழுத்தை விடுவித்துக்கொள்ள அப்பட்சி ஆனமட்டும் பாடுபட்டும் ஈற்றில் கொஞ்ச நேரத்துக்குள் இறந்து விட்டது.

இறந்துபோன 100 பிரேதங்கள் காணப்பட்டன.

மெக்ஸிக்கோவிலுள்ள சிஹுரவாஹுவா என்னுமிடத்தில் தேன் சேர்ப்பதற்காக ஒரு இடையன்காட்டுக்குச்சென்றான். அப்பொழுது அவன் அங்கேஒரு குகையைக் கண்டு அதற்குள் சென்று பார்த்த பொழுது அங்கே இறந்துபோன ஆண் பெண்களுடைய 100 பிரேதங்கள் கிடந்தனவாம். பிரேதங்களிற் சில தொழுது கொண்டிருப்பனபோலவும் மற்றவை கஷ்டத்தினால் இறந்தவைபோலவும் காணப்பட்டனவாம். ஸ்பானியதேசத்தின் யுத்தகாலத்தில் இவர்கள் பிடிக்கப்பட்டிருக்கவேண்டுமெனத்தெரிகிறது.

இருபதுலக்ஷம் சதுரமைலுக்குக் காடு.

தென் அமெரிக்காவிலுள்ள அமேசன் என்னும் நதியின் பள்ளத்தாக்கு 20 லட்சம் சதுரமைல் விஸ்தாரமுள்ளதாயிருக்கின்றது. அதிலுள்ள குடிசனம் ஒரு சதுரமைலுக்கு ஒரு ஆள் வீதத்திற்கும் குறைவாயிருக்கிறது. இப்படியிருத்தற்குக் காரணம் நிலம் அதிகம் செழிப்புள்ளதா யிருப்பதே. இந்த இடம் மனிதர் உட்செல்லக்கூடாத விதமாகத் தாவரங்கள் அடர்ந்த காடாகவிருக்கின்றது.

விளம்பரம்.

எனது பரிபாலனத்துட்பட்ட காரைநகர் மேற்கு சிவஞானோதய வித்தியாசாலைக்கு 3-ம் தாரதரப்பத்திரம் அல்லது 2-ம் தாரதரப்பத்திரம்பெற்ற ஓர் ஆண் உதவி உபாத்தியாயர் தேவை. விருப்பமுடையவர் என்னைக்கண்டு ஒழுங்கு செய்துகொள்ளவும்.

ப. சண்முகம்,
விதானை,
காரைநகர்.

(Mis 1202.)

மரங்களுக்கு வர்ணம் ஊட்டும் முறை.

மரங்கள் வளரும்போதே அவற்றிற்கு வர்ணமூட்ட ஜெர்மனியில் ஒருமுறை கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறதாம். அடிமரத்திலும் வேரிலும் சில துவாரங்கள் செய்து அவற்றில் றப்பர்க் குழாய்களைப் பொருத்திச் சாயக் குழம்பைப் பாய்ச்சுகிறார்களாம். இவ்வாறு வளரும்போதே சாயமேற்றப்பட்ட மரங்கள் அழகான பெட்டி நாற்காலி முதலியவைகள் செய்ய உபயோகப்படுமாம்.

யானைகளும் நாகமுந் துரத்தியமை.

ஒமூர்காக்கா சுல்தான்லெவ்வை என்னும் இரு மகமதிய வியாபாரிகள் தாம வன்னியில் காட்டு யானைகளைச் சந்தித்தமையைப் பற்றிக் கூறியிருக்கின்றனர். இவர்கள் தான் தேயிலையும் பழைய புடவைகளும் வாங்கி வியாபாரஞ்செய்பவர்கள். இவர்கள் குருநாக்கலைச்சேர்ந்த மின்னேரிக்குத் தேயிலை வாங்கச் சென்றிருந்தபொழுது தமக்கு உதவியாக நாயுடு என்னுமொருவனையும் கொண்டு சென்றார்கள். நாயுடு என்பவனின் யோசனைப்படி காட்டு எருமைகளைப் பிடிக்கத் தீர்மானித்து அடர்ந்த காட்டுக் கூடாகச் சென்று ஒரு பெரிய ஆலவிருட்சத்தின் கீழ்த்தங்கி அங்கே எருமைகளைப்பிடிக்க வலைகளைப் படுத்தார்கள். நாயுடும் ஒமூர்காக்காவும் மரத்தில் ஏறிக்கொண்டனர். சுல்தான் கீழே நின்றான். கொஞ்ச நேரத்தில் சுல்தான் சமீபத்தில் ஒரு பெரிய யானையைக் கண்டு திடுக்கிட்டான். அம்மிருகம் அப்பொழுது ஒரு பெரிய சத்தமிட்டது. இது மரத்திலிருந்தவர்களைத் திடுக்கிடச் செய்தது. பயத்தினால் நடுங்கிக்கொண்டிருந்த ஒமூர் தன்கையிலிருந்த துப்பாக்கியைக் கைநழுவவிட்டான். அது யானைக்குமேல் விழுதலும் அதற்கு இன்னும் கோபமதிகரித்தது. அது சுல்தானைத் துரத்தத் தொடங்கியது. அவன் வேகமாக ஓடும்பொழுது எதிர்முகமாக இன்னுமொரு யானை வந்தது. அதுவும் இவனைத்துரத்த ஆரம்பித்தது. சங்கடத்திற்குள்ளான சுல்தான் அப்பொழுது ஓர் பாழ்ங்கிணற்றுள் குதித்தான். அக்கிணற்றின் பக்கங்களிலிருந்து வளர்ந்து கிணற்றை மூடிக்கொண்டிருந்த பற்றைகள் கிணற்றுள் வீழாவண்ணம் இவனைத் தாங்கிக் கொண்டிருந்தன. அப்படியிருக்கும்பொழுது அங்கேயும ஒரு நாகம் இரைந்துகொண்டு அவனுக்குமேல் பாய்ந்தது. இதற்குள் மரத்திலிருந்த நாயுடு இறங்கித் துப்பாக்கியை எடுத்துச் சுட்டான். அதினால் யானைகளும் நாகமுந் துரத்தப்பட்டன. ஆலமரத்தடிக்குத் திரும்பிவந்து பார்த்தபொழுது ஒமூர் என்பவன் பயத்தினால் மரத்திலிருந்து வீழ்ந்து பிரஞ்ஞையற்று நிலத்தில் கிடக்கக் கண்டார்கள்.

சேவ்ரிப்பின் (Safety pin) ஒன்றை ஒருபெண் விழுங்கியமை.

ஐக்கிய மலாய்நாட்டில் ஒரு தமிழ்ப்பெண் இரவு 11 மணிவரையில் உறங்கிக் கொண்டிருந்தபொழுது வெப்பம் அதிகமாயிருந்தமையினால், படுக்கையிலிருந்து கொண்டே தனது உடுப்பை மாற்றினள். அப்படி மாற்றும் பொழுது அந்த உடுப்பைச் சேர்த்துக் குற்றிய மடக்கு ஊசியைக் கழற்றி வாயில் வைத்துக் கொண்டு மறுபடியும் நித்திரை போயினள். இந்த மடக்கு ஊசியின் இரண்டு நுனியும் ஒன்றோடொன்று கொளுவப்பட்டிருக்க வில்லை. அது தொண்டைக்குள் போய்ச் சிக்கிக்கொண்டது. 11—30 மணியானதும் தொண்டையில் நோகிறதெனக் கூறினள். மறுநாட்காலை தொண்டைநோவுக்கு வைத்தியம் செய்யப்பட்டது. தன்வாயில் வைத்திருந்த மடக்கு ஊசியைப்பற்றி அவளுக்கு ஞாபகமில்லை. இந்த விஷயத்தை அவள் மறந்து விட்டது அதிஷ்டவசமென்றே சொல்ல வேண்டும். ஏனெனில் இதைச் சிந்தித்துக் கொண்டும் இதற்காக வேண்டியிருந்த சிகிச்சையைச் சிந்தித்துக் கொண்டுமிருந்தால் அவளது சுகத்திற்கு அது பங்கமாக முடியும். 9 நாட்கள் கழிந்ததும் அவ்வூசியை அவளே எடுக்கத் தக்கதாகவிருந்தது. அதன் நீளம் 1½ அங்குலம்; கூரிய பக்கமே முதலில் உட்சென்றது. இந்த 9 நாட்களும் பால் முதலிய தண்ணீர்ப் பதார்த்தங்களையே அருந்தி வந்தனள். தொண்டை நோவுக்காக வைத்தியஞ் செய்தபொழுது இந்த ஊசி கொஞ்சம் கொஞ்சமாக வெளிப்போந்தது. குண்டூசி முதலியவைகளை வாயில் வைத்தபடி நித்திரை செய்பவர்களுக்கு இது ஓர் எச்சரிப்பாயிருக்கும்.

விளம்பரம்.

யாழ்ப்பாண ஆரியதிராவிடபாஷாபிவிருத்திச் சங்கத்தாரால் வெளியிடப்பட்ட பாட அட்டவணையில் நின்றும் பிரவேச பரீக்ஷைக்கு நியமிக்கப்பட்ட பாடங்களுள் ஒன்றாகிய நல்லிசைப் புலவர் இரண்டாம்பாகம் நீக்கப்பட்டிருக்கிறதென்பது இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

கா. கந்தையா,
யா. ஆ. தி. பா. வி சங்கக்
காரியதரிசி.

(Mis. 1203)

சிறிய உலகம்.

ஐந்து நிமிஷங்களுக்குள் உலகத்தையே சுற்றி விட்டு வந்துவிடலாம்! கடல்கள், ஆறுகள், மலைகள், பாலைவனங்கள் அனைத்தையும் தாண்டி வழியிலிருக்கும் பல நகரங்களையும் கிராமங்களையும் பார்த்துவிட்டு முக்கிய க்ஷேத்திரங்களைக்கூடக் கண்டு திரும்பிவிடலாம். இதற்கு ஆகாயவிமானத்திலோ அன்றிக் கப்பலிலோ ஏறிப் பிரயாணஞ்செய்ய வேண்டியதில்லை. ஆயிரக்கணக்கான மைல் தூரம் பிரயாணஞ் செய்து அலுத்துப்போக வேண்டியதுமில்லை. பாரிஸ் நகரிலுள்ள ஒரு பள்ளிக்கூடத்தின் தோட்டத்திற்குள்ளேயே உலக யாத்திரை முடிந்துவிடுகிறது.

அந்தத் தோட்டத்தில் 16-ஏக்கர் விஸ்தீரணமுள்ள நிலத்தில் உலகத்தையே அமைத்திருக்கின்றனர். ஒவ்வோர் தேசத்தையும் அத்தேசத்தின் முக்கிய நகரங்கள், நதிகள், மலைகள், காடுகள், முதலியவைகளையும் அங்கேயே காணலாம். உலகத்தையே சிறிய அளவில் அத்தோட்டத்திற்குள்ளே சிருஷ்டித்திருக்கின்றனர். தேசங்களெல்லாம் உண்மையில் மண்ணாற்றான் செய்திருக்கின்றனர். இச்சிறு உலகத்திலுள்ள ஆறுகளிலும் கடலிலும் தண்ணீர்தானிருக்கிறது. அட்லாண்டிக் சமுத்திரம் இந்த உலகத்தில் 3 அடி ஆழமிருக்கிறது. பள்ளிக்கூட மாணவர்கள் பாரிஸிலிருந்து சிறிய நீராவிக் கப்பலில் அமெரிக்காவிற்குப் பிரயாணமாகிறார்கள். பிரயாணத்திற்கு மாதமோ அன்றி வருஷமோ தேவையில்லை. சில நிமிஷங்களில் முடிந்துவிடுகிறது. மாணவர்கள் பிரயாணத்திற்குக் கப்பல்களில் ஏறி விடுவார்களாகில் உலகத்தையே சுற்றி முடித்துக்கொண்டுதான் திரும்புகிறார்கள். இவ்விதம் அப்பள்ளிக்கூடச் சிறுவர்கள் தினந்தோறும் உலக யாத்திரை செய்து கொண்டே வருகிறார்கள்.

நகரங்கள், கோயில்கள், குளங்கள், முதலியவைகளையும் அதில் செய்திருக்கிறார்கள். இதில் நாம் முக்கியமாகக் கவனிக்கவேண்டிய விஷயம் யாதெனில் அதிக சிரமமெடுத்து கீழ்நாட்டுமுறையைத் தழுவி இந்த சிருஷ்டி உலகத்திலும் கோயில் முதலியவைகளைக் கட்டியிருக்கிறார்கள். புத்த விக்கிரகங்களையும் கோயில்களையும் இப் புது உலகத்தில் காணலாம்.

நூல்களைப்பற்றிய குறிப்பு.

திருக்குறள் மூலம்.

திருநெல்வேலித் தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார், சைவநன்மக்களெல்லாரும எளிதிற் பெற்றுப் படித்துப் பயன்படும்வண்ணம் குறைந்த கிரயத்திற்கு இப்பொழுது தமிழ் வேதமெனச் சொல்லப்படும் திருக்குறளை அச்சிட்டு முற்பண முதவினோருக்குப் பிரதியொன்று 2அணா விகிதமாக விக்கிரயஞ் செய்கின்றார்கள். இந்நூலின் முகத்தில் திருவள்ளுவர் திருவுருவப்படம அழகுற அமைக்கப்பட்டிருக்கின்றது. நூலின இறுதியில் திருவள்ளுவமாலை,பாட்டுமுதற்குறிப்பகராதி யெனனுமிவைகள் சேர்க்கப்பட்டுள்ளன. பிரதிகள் சிறிய பிரமாணத்தில் அழகுற அச்சிடப்பட்டுள்ளன. ஷெ கழகத்தாரின் தமிழபிமானச் செயலும பரோபகாரசிந்தையும் பின்பற்றற்பாலனவாம்.

விவேகாநந்தம்.

இது சென்னையிலிருந்து வெளிவரும் சஞ்சிகைவடிவினதாகிய ஒரு சிறந்த தமிழ்ப்பத்திரிகையாகும். இதன்கண் அறிஞர்களால் எழுதப்பட்ட பல அரிய வியாசங்களும் பலவூர்ப்புதினங்களும் இன்னபிறவும் காணப்படுகின்றன. இதன் 4-ம் புத்தகம் 2-ம் சஞ்சிகையிலுள்ள ஒற்றுமையென்னும் வியாசத்தின் ஒருபாகத்தை இற்றைப்பிரசுரத்திற் பிறிதோரிடத்து அநுவதித்துள்ளோம். பத்திராக்கிரயம் இந்தியா இலங்கை பர்மா முதலாமிடங்கட்கு ரூபா ஒன்று. சிங்கப்பூர் முதலாமிடங்கட்கு ரூபா1 அணா 4.

எமது பார்வைக்கு அனுப்பிய புத்தகம் பத்திரிகை என்னும் இருபிரதிகளின் பொருட்டு நன்றி கூறுகின்றோம்.

சைவ சமயமும் கொல்லா விரதமும்.

கடவுளுஞ் சிருட்டியும்.

நமது கட்புலனுக்கு நானாபேத ரூபங்களாய்க் காணப்படுகின்ற இப்பிரபஞ்சமானது அண்டசம், சுவேதசம், உற்பிசம், சராயுசம் என்ற நால்வகைத் தோற்றத்தினின்றும் சுரர்,நரர்,விலங்கு, பறவை, தாவரம், ஊர்வன, நீர்வாழ்வன ஆகிய எழுவகைப் பிறப்புக்களாய் எண்பத்துநான்கு லக்ஷ சீவராசிகள் நிரம்பப்பெற்றிருக்கிறது. ஒரே ஈஸ்வர சிருட்டியாகிய இவ்வெண்பத்துநான்கு லக்ஷ சீவராசிகளுக்குள் ஒன்றுக்கொன்று ஏற்றத்தாழ்ச்சியான பேதத்தன்மைகளுண்டென உற்று நோக்கின்,

“ஆறுசுவையோ டருந்துத லுண்பஞ்ச
துயிறல், கூறுகாண விதங்களின் மாதரை
கூடுதே, றேறிவ்சாரத்தி னுனச்சஞ்
றேறின் மண்டோல், வேறுமுயிர்கடமக்
கையானார் மேலென்பவே” (அருட்பிரகாச

என வருவனவற்றால் கார்த்தல், புளித் துவர்த்தல், உவர்த்தல், கைத்தல், தித்தி லாகிய சுவைகளோடுங் கூடியதாய்ப் பக்கு பாகஞ்செய் துண்பதாலும், ஒப்பற்ற தூங்கும சத்தின்கண்ணே பஞ்சுபொதிந்த மெத்தையை விரித்து அதன்மேல் தலையணை பட்டு பீதாம் பர முதலியன பரப்பிச் சுகநித்திரை செய்வதா லும், அறுபத்துநான்குவித லீலாபேதமறிந்து ஸ்திரீகிரீடையிற் சொக்கி மகிழ்வதாலும், மனோவிசாரம் வந்தற்றபொழுது பலவித வுபாயங்களினால் மனதைத் தேற்றிக் களிப்படைவதாலும், இத்தியாதிபேதங்களையும் பகுத்துணரு மாற்றல் மனிதரையொழிந்த பிறசீவர்களுக் கின்மையாலும் மனிதசென்மமே எல்லாவற்றிலுமிருந்து ஏற்றமுடைத்தென்பது தேற்றமாம்.

இங்ஙனமாய இம்மானுட சென்மம் இலகுவில் கிடைக்கப்பெறாததாய்,

புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருகமாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுரராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்றவித் தாவரசங்கமத்து
ளெல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தே னெம்
[பெருமான் (திருவாசகம்)

என வரும் மணிவாசகத்தின்படி ஒவ்வொரு சென்மத்திலும் அனேகந்தரம் பிறந்து பிறந்துழந்து, மீண்டும் இவ்வுத்தம சென்மங் கிடைக்கப்பெற்றிருக்கின்றோம். அது எவ்வாறாயினுமாகட்டும்; எங்கள் கடந்தொழிந்த சென்மங்களையெல்லாம் ஆராயப்புகுந்து வீணலைச்சற்பட வேண்டியதில்லை. இச்சென்மத்தில் நாங்களனுபவிக்குஞ் சுக துக்கங்களினாலேயும் வேதவாக்கு, ஆப்தர்வாக்கு ஆகிய மெய்ச் சாக்ஷியங்களினாலும், ஒரே அம்சமாகிய மானிடவருக்கத்துள் கூன், குருடு, செவிடு, ஊமை, சப்பாணி முதலாம் அங்கவீனங்களும், நெட்டை,குட்டை, மெலிவு, பொலிவு ஆகிய தோற்ற வேறுபாடுகளும், செல்வர், தரித்திரர், வியாதி என்ற ஏற்றத் தாழ்ச்சிகளும், கறுப்பு, சிவப்பு, வெண்மையாகிய நிறபேதங்களும், காமம், குரோதம், லோபம், மோகம், மதம், மாற்சரியம் ஆகிய குணதோஷங்களும், ஒன்றுக்கொன்று வேறுபட்டிருக்குங் காரணத்தால் அவரவர் செய்து கொண்ட வினைக்கீடான சரீரத்தைப் பெற்று இன்பதுன்பத்தை யடைந்துவருகிறோ மென்பது வெளிப்படையாம்.

பெறற்கரிய இப்புண்ணிய யாக்கையைப் பெற்றுக்கொண்டோ மெனினும், இது ஒரு குறிப்பிட்ட காலவரையிலாவது நீர்க்குமிழி போல் தோன்றி யழியக்கூடியதா யிருக்கின்றது. அங்ஙனம் ஒருநாளைக்குச் சொல்லாமையே நீங்கிவிடுமென்பதும் உண்மைதான்; என்றாலும், அந்தோ! “இப்பிறவி தப்பினால் எப்பிறவி வாய்க்குமோ ஏது வருமோ அறிகிலேன்” என்னும் ஆப்த வாக்கின்படி இனி வருஞ் சென்மமேதுவாயிருக்குமோ வென்பதை அறிந்து சொல்ல ஒருவராலும் முடியாது. ஆகையால், இச்சரீரம் உள்ளபொழுதே என்றுமழிவில்லாத பேரருட் பிழம்பாம் இறைவனது திருவருளைப் பெற்றுய்வதற்கான பிரயத்தனங்களைச் செய்ய முயல்வதே இச்சரீரம் கிடைத்ததாற் பெறும் பயனும் மானுட சீவியத்தின் முடிவான லக்ஷியமுமாகும். அதைவிட நாம் முயற்சித்துத் தேடி யடையக்கூடியதான வேறொரு வஸ்து இல்லவே யில்லை. (வரும்.)

கா. க. தனபாலன்,
மானிப்பாய்.

“தேசபக்தன்” சிலுசிலுப்பு.

ஸ்ரீ எல்லப்பநாய்க்கனின் வில்லங்கவேண்டுகோள்.

விபவ வருஷம் சித்திரை மாதம் ௧௧-ந் திகதி வெளிவந்த, “தேசபக்தன்” என்ற பத்திரிகையில், “தென்னாட்டுப் பார்ப்பனர்களின் யோக்கியதை, இலங்கை வாசிகளுக்கோர் வேண்டுகோள், “என்ற இரட்டைத் தலையங்கத்தோடு கூடிய ஒரு விஷயம் வெளிவந்துள்ளது. அக்கடிதம் எழுதியவர் ஸ்ரீ R T. எல்லப்பநாய்க்கன் என்பவராகும். தென்னாட்டுப் பார்ப்பனரின் யோக்கியதையைக் கூறி, இலங்கையரை வேண்டுதல் செய்வதன் அர்த்தம் எனக்குப் புலப்படவில்லை. “இலங்கை வாசிகளுக்கோர் வேண்டுகோள்” என்றதில் “இலங்கைவாசிகள்,” இலங்கையில் வாழும், சிங்களர், தமிழர், சோனகர், பறங்கியர், ஆதியோரைக் குறிக்கின்றதா? அன்றி, இந்துக்களை மாத்திரம் குறிக்கின்றதா? பார்ப்பனர் கல்மனப்பார்ப்பனராம். “பெற்றோர்கள் உயிருடனிருக்கும்போது சரியாய்க் கால்வயிறு கஞ்சியுங் கொடுக்காமலும், இறந்தபோது மான அடையளிக்காமலும்” இருப்பவர் நல்மனமுடையவரா? எண்ணிறந்த தானங்களைக் கல்மனப் பார்ப்பனருக்குக் கொடுப்பவர் இந்துக்களாயிருக்க, பார்ப்பனருக்கு ஒருவித தானமுங் கொடாத, சிங்களர், பறங்கியர், சோனகர் ஆதியோரையும் ஒருங்கு

ர்ந்து. "இலங்கை *வாசிகளுக்கோர் ண்டுகோள்," என்று எழுதியது ஸ்ரீ எல் ப நாய்க்கரின் அவதாரக் குறைவே ாகும். பார்ப்பனருக்குத் தானங்கொடுப் து, அல்லது கொடாமல் விடுவதைப்பற்றி ன் இங்கு ஒன்றும் பேசவில்லை. பார்ப் னருக்குத் தானங்கொடுப்பதை நிறுத்திவிட ற் பார்ப்பனர் பட்டினிகிடந்து இறந்து டியமாட்டார்கள்.

பார்ப்பனர்களுக்குக் கொடுத்தாற்றான் மோட்சமென்னும் குருட்டு நம்பிக்கை, யென்கிறார். நம் நாய்க்கர், எத்தகைய பார்ப்பனருக்குத் தானம் கொடுக்கவேண்டுமென்று சாத்திரங்களில் விதித்திருக்கின்றதென்பதை ஸ்ரீ நாய்க்கர் அறிந்துகொண்டு, அதன்பின்னர் இந்தக் கேள்வியைக் கேட்டுப் பார்க்கலாம். பார்ப்பன குலத்திற் பிறந்த எவனுக்கும், அவனுடைய ஒழுக்கம், யோக்கியம், கல்வி, நைட்டிகம், ஆதியனவற்றைக் கவனியாது, தானங் கொடுக்கலாமென்று சாத்திரங் கூறுகின்றதா?

இந்தியாவிலே, உத்தியோகப் போட்டியாலெழுந்த பிராமணத் துவேஷத்தை நம் நாட்டிலும் பரப்பப் பார்க்கிறார். கால்வயிறு கஞ்சியின்றிக் காற்றாய்ப்பறக்கும் ஏழைகள் இங்கேயில்லை. சட்டசபைகளில் அதிகம் பெற விரும்பும் பார்ப்பனரல்ல. சுயராச்சியக் கட்சிபோன்ற கட்சிகளிங்கேயில்லை. இஃதிங்ஙனமிருப்ப, "இலங்கையருக்கு ஓர் வேண்டுகோள்," எற்றுக்கு? வாலிழந்த நரியொன்று ஏனைய நரிகளையும் வாலையறுத்தெறியும்படி புத்தி கூறியவாறு, இந்தியாகிய தாங்கள், பிராமண-அப்பிராமண வாதத்தால் இடர்ப்படுவது போதாதென்று, எம்முள்ளும் அப்பிணியை நுழைத்துவிடப் பார்க்கிறார்; ஸ்ரீ நாய்க்கர்.

"இலங்கையருக்கோர் வேண்டுகோள்," என்று மகுடவசனமிட்டுக்கொண்டு, எழுதுவதெல்லாம் இந்தியச் சங்கதிகள். பார்ப்பனரும் பார்ப்பனரல்லாதாரும் ஒற்றுமையாக வாழும் இந்நாட்டார்க்கு இந்தச் சங்கதிகள் தேவையில்லை. இந்தியாவிற் பார்ப்பனர்-பார்ப்பனரல்லாதார் வாதம் நிகழ்ந்துகொண்டிருப்பது, "தேசபக்தன்" கொழும்பிற் றோன்று முன்னரேயே இங்குள்ளார்க்குத் தெரியும். தெரிந்துமென்? காரணமில்லாமற் காரியம் நிகழுமா? இங்குள்ள பார்ப்பனர்க்கும் பார்ப்பனரல்லாதார்க்கும் சண்டை நிகழ்தற்குரிய காரணமொன்றுமில்லையே. அற்றாக, "எழுமின், விழிமின் தமிழ் நாட்டாரைப்போற் கிளம்பவேண்டும்," என்பனவாய விண்பிதற்றல்கள் ஏன்?

"சுயமரியாதை மகாநாடு கூட்ட முயற்சி எடுங்கள். அதற்குத் தொண்டாற்ற எனது அன்பர் திரு. சாரநாதர் முன்வந்து வருவார். அவரையும், அவர் பத்திரிகை, "தேசபக்தனையும்" பின்பற்றி சுயமரியாதைப் போர் நடாத்துவார்களாக என்று ஸ்ரீ நாய்க்கர் வீணாக ஊளையிடுகிறார். இலங்கை வாசிகளெல்லாரும் சுயமரியாதை யில்லாதவர்களா? இங்கே எத்துறையிலும் முன்னேற்றமடைந்திருப்பவர் பார்ப்பனரல்லாதவரே. ஆனால் அதைப்பற்றி யிங்குள்ள பார்ப்பனர். பொறுமைப் படுவதில்லை; போட்டி போடுவதில்லை.

இங்குள்ள பார்ப்பனர் தமக்குரிய ஒழுக்கம், நைட்டிகம், தொழில் முதலியனவற்றைக் கடைப்பிடித்தொழுகும் இயல்பினர். ஆகையினாற்றான், பார்ப்பனருக்கும் அவர்களுக்கும் ஒருபோதும் ஒருவித சச்சரவுகள் நேருவதில்லை. தங்களுக்குரிய சகல தந்திரங்களோடும், சுயமரியாதையோடும் வாழும் நமது பார்ப்பனரல்லாதாருக்கு, ஸ்ரீ எல்லப்ப நாய்க்கர் விடுத்த வேண்டுகோள் வியர்த்த வேண்டுகோளே.

—இங்ஙனம்,
க. சி. தங்கசாமி ஐயர்,
வயாவிளான்.

ஒற்றுமை.

நாம் ஒருவருடன் ஒருவர் ஒற்றுமையாக இருத்தல் வேண்டும். ஒன்று சேர்ந்து வாழ்வதே ஒற்றுமையெனப்படும். இவ்வொற்றுமை மானிடராகிய நமக்குமாத்திரம் பயனளிப்ப ல்ல. எப்படிப்பட்ட அற்ப வஸ்துக்களும் ற சேர்வதால் அடைவது மேன்மையே. த்துளி சிறிதேயாயினும் அவை பல கூடுவதால் பெரு வெள்ளமாகிப் பல யந்திரங்களை யியக்கவும், பல நகரங்களை யழிக்கவும் செய்கின்றன.

நான்கு எருதுகள் ஒன்று சேர்ந்திருக்கும் பொழுது சிங்கத்தின் வல்லமையை யடக்கின. ஆனால் அவைகள் ஒற்றுமைவிட்டொன்று பிரிந்தபின் அச்சிங்கத்தினாலேயே கொல்லப்பட்டதையும் நோக்குவோமாயின் ஒற்றுமையின் பயன் நன்கு விளக்கும். மரம் தனித்திருந்தால் அதன் பெருமை அற்பமேயாகிறது. பல மரங்கள் ஒன்றுசேர்ந்தால் தோப்பெனப் பெயர் பெற்றுப் பக்ஷிகளாலும், மிருகங்களாலும், மானிடர்களாலும் மிகவும் விரும்பப்பெற்று நன்கு மதிக்கப்படுவதை நாம் கண்கூடாகக் காண்கின்றோமல்லவா? பல சிறு சிறு நார்களால் உண்டாக்கப்பட்ட கயிறுகளே யானையைக் கட்டுவதற்கும் தேரை இழுப்பதற்கும் உதவுகிறது. எறும்பினிடத்துக் காணப்படும் ஒற்றுமை காரிய நிர்வாகசக்தி முதலான அரிய குணங்கள் வியந்துரைக்கப்பட்டுள்ளன. சாலமோன்ராஜா என்னும் மகா ஞானியானவர் சோம்பேறியாய்த் திரிந்தலையும் பேதையை நோக்கி "சோம்பேறியே" நீ எறும்பினிடத்திற் போய் அதன் வழிகளைப் பார்த்து, ஞானத்தைக் கற்றுக்கொள் என்று நன்மதி புகட்டியுள்ளார்.

அன்றியும், வானர சேனைகள் தமது ஒற்றுமையால் ஒரு காலத்தில் சூரியகுலத்தரசனான ஸ்ரீ ராமச்சந்திரமூர்த்திக்கும் துணைபுரிந்தன. எறும்புப்பாலம் குரங்குப்பாலம் முதலிய விநோதங்களைப் படித்த பெரியோர் பின்வருமாறு கூறியிருக்கின்றார்.

"சற்றெறும்பு தூக்கணம் புட்காக்கை யென்றிவைபோல், தங்கருமம் நல்ல கடைபிடித்துத்— தங்கருமம், அப்பெற்றியாக முயல்பவர்க் காசாரம, எப்பெற்றி யானுப்படும்."

ஆப்பிரிகாவில் பேர்போன வேட்டைக்காரன் ஒருவனை ஓரிரவில் கொசுக்கள் வளைந்துகொண்டன. தான் கற்ற வித்தையையெல்லாம் அவைகளிடம் காட்டியும் அவைகளை மேற்கொள்ள அவனால் முடியவில்லை. துப்பாக்கியைப் பிரயோகம்பண்ணினான் எனினும் பயனில்லை. செவியிலும் மூக்கிலும் கண்ணிலும் கொசுக்கள் மொய்க்குங்கால் துப்பாக்கி என்னசெய்யும். இறுதியில் அக்கொசுக்களுக்குப்பயந்து தான் இருந்தஇடத்தைவிட்டு ஓடித் தப்பினான். அநேக சிங்கங்களையும் யானைகளையும் கொன்ற அவ்வீரனைக் கொசுக்கள் வென்றுவிட்டன. இது ஒற்றுமையின் பயன் அன்றோ?

சிலகாலத்திற்கு முன் ஐரோப்பாவை அடுத்த கடல் ஒன்றில் சிறிய மீன்கள் மலைபோல் ஓரிடத்தில் வந்து குவிந்து பெரிய நீராவிக் கப்பல்கள் அவ்வழியே செல்லாதபடி தடுத்துக்கொண்டன. தேர்ச்சிபெற்ற மாலுமிகள் பலர் கூடித் தாங்கள் கற்ற வித்தைகளையெல்லாம் அந்த மீன்களிடம் காட்டியும் பயன்படவில்லை. கப்பல்கள் பலநாள் அந்த மீன்களுக்கிடையில் நின்று தவித்துப் பின்பு தெய்வச்செயலாய்த் தப்பிக் கரைசேர்ந்தன. அணுக்களின் ஒற்றுமையால் உயர்ந்த மலையிலும், துளிகளின் ஒற்றுமையால் விரிந்த கடலிலும் பிரமாண்டமான பொருள் இவ்வுலகத்திலுளவோ? குப்பை ஒற்றுமைப்படின் கோபுரத்திலும் உயர்ந்துவிடும். கோபுரம் பிளவுபடின் குப்பை மேட்டினும் தாழ்ந்துவிடும்.

ஒற்றுமைப்பயனை உணர்வதற்கு நமது உடலே சிறந்த கருவியாய் நிற்கின்றது. பக்கவாதம் திமிர்வாதம் முதலிய நோய்களால் உறுப்புக்கள் ஒற்றுமைக் குறைவுறும்பொழுது உடல் எத்துணைத் துன்பம் எய்துகின்றது? மனம் முதலான அந்தக்கரணங்கள் ஒற்றுமையின்றித் தத்தம் நிலை குலையும்போது மனிதன் என்னபாடு படுகின்றான்? மகா மேதாவியாயிருந்தவனும் பைத்தியகாரன் என்று பெயர் பெற்று விடுகின்றானன்றோ? நமது உடலிலுள்ள அகத்துறுப்புக்களும் புறத்துறுப்புக்களும் ஒத்து நிற்பின் சர்வலோக சரண்யனான கடவுளையும் வயப்படுத்தலாகுமே.

இஸ்ரவேல் என்னும் பக்த சிகாமணியிடம் எம்பெருமான் "என்னை விட்டுவிடு" என்றுரைப்பதற்கும், அவர் "நான் உம்மைப் போக விடேன்" என்று மறுப்பதற்கும் காரணமாய் நின்றது யாது? மார்க்கண்டேயனுடைய தவ மகிமையை அறியாதார் யார்?

"அன்பாலின்றென்னையறிந்தேபிணித்தமைநன்
றென்பாதந்தன்னையினிவிடுக"

என்று சொல்லுமாறு சகாதேவன் செய்த சூழ்ச்சி என்ன? "இறைவர் தொண்டருள்ளத் தொடுக்கம்" என்ற ஔவையார் திருவாக்கும இவ்வுண்மையை வலியுறுத்துகின்றதன்றோ?

உரம் மிடறு மூக்கு நாவு இதழ் பல் அண்ணம் இவை யாவும் ஒற்றுமைப்படின் அழகாயப் பேசவும், இனிமையாய்ப் பாடவும் உதவியாகிறது. பல் மூக்கு மிடறு முதலியவற்றுளொன்று பழுதுபடின், தொனி எவ்வளவு விகாரமடைகின்றது. இரண்டு கையுஞ் சேர்ந்தால் நன்றாய் வேலைசெய்யலாம். ஒற்றைக் கையன் எவ்வளவு வேலைசெய்வான்? இரண்டு காலும் ஒற்றுமைப்பட்டால் மணிக்கு நான்கு மைல் தூரம் நடக்கலாம். ஒற்றைக்காலன் எவ்வளவு தூரம் நடப்பான்? இங்ஙனம் நமது உடலே நமக்கு ஒற்றுமையின் அவசியத்தைத் தெற்றென உணர்த்துகின்றது.

எத்தேசமும் வேற்றரசர்களின் ஆளுகைக்குட்படுவது ஒற்றுமை யில்லாத காரணம் பற்றியே. இங்கிலாந்துதேசம் கி. பி. 1066ல் நார்மன் ஜாதியனான வில்லியமின் கையில் போன காரணம், ஆங்கிலோ சாக்ஸனான ஹரால்டுக்கு அவனுடைய சிற்றரசர்களான எட்வின், மார்க்கார் என்பவர்கள் அழுக்காற்றில் ஒத்தாசை செய்யாமற் போனதாலேதான். அதுபோல இந்துதேசத்தில் அநேக சம்பவங்கள் நடந்தன. நம் தேசம் உன்னத ஸ்திதியிலிருந்து தாழ்மையடைந்தது ஒற்றுமையில்லாததனாலேயே ஒழிய வேறன்று.

அலெக்ஸாந்தர் என்னும் கிரேக்கர் கோமான், இந்தியாவின்மேல் படையெடுத்துவந்த பொழுது, ஸிந்துநதிக்கு இப்பால் உள்ள தக்ஷசீலம் என்னும் பிரதேசத்தை ஆண்டுவந்த அம்பி என்பவன், தனக்கு அருகாமையிலுள்ள சிற்றரசர்களிடம் உள்ள சச்சரவினால், அலெக்ஸாந்தரை வரவேற்று, அவனுக்கு ஒத்தாசை செய்து, புருஷோத்தமன் என்னும் மகா மேதாவியாகிய அரசனைத் தோற்கடிக்கச்செய்தான். ஆனாலும், மேன்மை குணம் வாய்ந்த அலெக்ஸாந்தர், புருஷோத்தமனின் தீரத்தைப் புகழ்ந்து, அவனைச் சக்கரவர்த்தியாகி அவனுடன் உண்மைநட்புப் பாராட்டித் திரும்பினான். காட்டிக்கொடுத்த அம்பிக்குச் சிறிதளவு கௌரவமாவது பெருமையாவது வந்ததா? இல்லை. இல்லை. (வரும்)

"விவேகானந்தம்".

சுப்பிரமண்ய ஜோதிடம்.

இந்தியா தேசமெங்கும்
தலைமைபெற்றுப் பிரகாசிக்கும்
ஜோதிடாலயம் இதுவே.

உங்கள் அதிஷ்டத்தை ஏன் தெரிந்துகொள்ளக் கூடாது. இன்றே யெழுதி உங்கள் அதிஷ்டத்தைத் தெரிந்துகொள்ளுங்கள்.

உங்கள் எதிர்காலப் பலனைப்பற்றிய 6 கேள்விகளுக்குப்பதில் எழுத ரூபா 1-00. மேல் தனிக் கேள்விகளுக்கு அணா 4. ஒருவருஷப் பலன் எழுத ரூபா 2-00. கடிதம் எழுதும்போது உள்ள நேரத்தையாவது ஜாதகக் குறிப்பையாவது தெரியப்படுத்தவேண்டியது. மற்ற விபரங்களுக்கு எழுதித் தெரிந்துகொள்ளவும்.

சர்வஜய வசீகரணி.

தாயித்தை 1-க்கு ரூபா 2—8—0

இது எல்லாவிதமான காரியங்களிலும் ஜெயம்பெற்று வருவதுமன்றி செய்வினை போய் நல்வினை யுண்டாக்கும். எல்லா விதமான காரியங்களிலும் அனுகூலப்படும்.

மானேஜர்,
ஸ்ரீ சிவசுப்பிரமணிய
ஜோதிட நிலயம்.
(Q 103) திருத்தணி, சித்தூர்ஜில்லா.

ஸந்தீபன லேகியம்.

ஓர் புதிய யூனானிமுறை.

இந்த லேகியத்தை மிகவுஞ் சிரமப்பட்டு அரிய பல மூலிகைகளைக்கொண்டும் ஸாலாமிஸ்ரி, பஞ்சாப்மிஸ்ரி, ஸாருஞ்சான்மிஸ்ரி, போஜிதான்மிஸ்ரி, கீர்மூளனி விரை, இஸ்கூல்விரை, விளாம்பிசின, பேதானு முதலிய யூனானி சரக்குகளைக் கொண்டும், நரம்புகளுக்கும் புருஷ ஜனனேந்திரியங்களுக்கும வலுவைக்கொடுத்துக் கெட்டிப்படுத்தி ஸம்பூர்ணமான சுகத்தை அனுபவிக்கும்படியான சரீர திடத்தைக் கொடுக்குமாறு அரிய முறையாய்ச் செய்யப்பட்டு இருக்கிறது. குணமில்லாவிடில் பணம் வாபீஸ் செயயப்படும்.

40 நாள் சாப்பிடக்கூடியது ரூ. 2—0—0.

அஸ்வினி
ஆயுர்வேத வைத்தியசாலை,
துக்காச்சேரி,
கொடவாசல் போஸ்டு,
(M. 62) தஞ்சைஜில்லா.

அடைவு நகை விற்பனவு விளம்பரம்.

1893-ம் ஆண்டின் 8-ம் இலக்கக் கட்டளைச் சட்டத்தின்படி லைசென்ஸ் பெற்று அடைவு பிடிக்கும் திரிகோணமலை 6-ம் நெம்பர் காசுக் கடைவீதி மு. தாமோதரம்பிள்ளை & இராசலிங்க மென்பவர்களிடம் அடைவுவைக்கப்பட்டு இப்போது தவணைதப்பி ஷெ சட்டத்தின் 12-ம் பிரிவின்படி பிரசித்தஏலத்தில் விற்கப் படவேண்டிய நகைகளின் விபரம்:—

இல.	வ.	ரூ.	ச.	நகைகளின் விபரம்.
1926ஆ 8-ம்மீ.				
K14	1	50	04	வைரக்கடுக்கன் சோடி 1
52	4	18		வெ. சிறு பாதசரம் சோ.1
75	5	10		கொப்புச்சிமிக்கி சோடி 1
98	7	10		பூசாந்திரமுடன் வெ. சின மணி 4 உடைமணி 13
99	7	10		பழைய தண்டை சோடி 1
100	7	10		அரும்புமணிக்கோர்வை 1ல் மணி 25 குப்பிசோடி 1
166	11	16		தங்கமோதிரம் 1
173	12	14		சிறுபாதசரம் சோடி 1
218	15	6		கொப்புச்சிமிக்கி சோடி 1
350	25	53		தங்க அரைஞாண் 1 கொடி
9-ம் மீ.				
446	4	6		பொன் தோடு சோடி 1
477	7	6		சிறு இதட்டு 1
490	9	20		பாதசரம் சோடி 1
497	9	10		தங்கமோதிரம் 1
585	18	20		பூசாந்திரமுடன் மணி 4 சிறுமணி 9
663	26	6	50	சிறு கலாவளைமோதிரம் 1
703	30	7		கூடு 1 கொக்கியில்லை
712	30	11		தேர்க்குச்ச சோடி 1 சிறு கூடு 1 வடகுவளை ஒற்றை
715	30	40		கைச்சங்கிலி 1, ச. 1 இ.
10-ம் மீ.				
724	1	25		தங்கக்காப்பு ஒற்றை
744	3	50		தாலிக்கொடி 1
758	4	35		குமிழா முத்துசோடி 1 தோடு சோடி 1
789	7	17		சிறு இமிந்தோடு சோடி 1
795	7	25		கைச்சங்கிலி 1 கல் 1 இல்.
809	8	65		½பவுண் 10கோர்த்த இலித் மணிக்கோர்வை 1 பின் இல்லை
857	11	6		பெட்டிமோதிரம் 1
899	14	25		மு. வி. டிம்மியுடன் பதக்கம் 1
903	15	12		தங்கமோதிரம் 1
913	16	18	54	பழு பொன் சரடு 1
973	20	45		பூரானட்டியல் 1 பழுது
987	21	7		வெ. அரைஞாண் 1
1033	25	12		பழைய மணியட்டியல் 1, சிங்களத்தோடு சோடி1
1035	25	46		1 பட்டிலைமாலை 1 நசி.
1048	26	12		சு. இ. சிறு இமிர்கடுக்கன் சோடி 1 பழு
1051	26	55		பூசாந்திரமுடன் சின மணி 7, வெ. பாதசரம் சோடி 1, வெ. அடுக்குக்காப்புசோடி 1 சு.இ.
1054	26	6		சிறுகொப்புச்சிமிக்கிசோ.1 பழுது
1084	28	45	79	பட்டக்காப்பு சோடி 1.
1100	29	8		வெள்ளி 4பட்டவல்மாலை1 சு. இ. பழுது
1115	30	12		சிறு பூசாந்திரமுடன் மணி 2, சிறுமணி 12 உடையல்
1119	30	20		மு. இ. பொன்பத பொன் சரடு 1 பழுது
11-ம் மீ.				
1147	1	23		வெ. பாதசரம் சோடி 1
1149	1	18		கல்விழு. பழு. பத. பொன் பூரானட்டியல் 1
1159	1	10		வெ. எஸ் கறளை சோடி 1
1160	1	9	04	வெ. பழைய எஸ் கறளை சோடி 1
1237	5	13		வெ. சங்கிலி 1
1258	6	8	50	தங்கமோதிரம் 1 கல் இல்.
1271	7	31		நசி பொன் தாலிக்கொடி1 சு. 1 இ.
1278	8	25		பி. இ. மணிக்கோர்வை 1ல் மணி 70
1298	9	25		பொன் தாலிக்கொடி 1
1328	11	10		வளையல் 6
1375	14	14		பொன் தோடு சோடி 1 வளையல் 4
1390	15	180		⅙ பவுண் 44 கோர்த்த மாலை 1
1424	16	12		பழு பொன் சரடு 1
1432	17	8		கைவிலக்கு 1 வெ. அரைஞாண் 1
1442	17	30		பூசாந்திரம் பின்னுடன் மணிக்கோர்வை 1 ல் மணி 4 வெ மணி 6
1443	17	12		கைவிலங்கு 1
1444	17	40		சிறு பூரானட்டியல் 1
1492	21	60		சிறு கெட்டிக் கொலிசுக் காப்பு சோடி 1
1501	21	12		சிறுதங்கக் காப்பு சோடி 1
1503	21	15		பொன் சரடு 1
1584	25	9		வளையல் 7
1619	27	50		பழு பொன்தாலிக்கொடி1 வெ பழைய பாதசரம் சோடி 1
1641	28	12		தங்கப்பவுண் 1
1664	29	140		சிங்கமுகக்காப்பு சோடி 1
1676	30	8		கொப்புச்சிமிக்கி சோடி 1
12-ம் மீ.				
1705	1	22		தங்கக்காப்பு சோடி 1
1719	2	20		5 பட்டு மணிக்கோர்வை 1
1741	3	15		கற்சிமிக்கி சோடி 1 கல் முருகு சோடி 1
1749	4	20		கம்பி அறுக்குத்து 24
1750	4	18		வெ. குழற்காப்பு சோடி 1 நசி.
1757	4	6		பழுதான பின் 1
1758	4	55		கம்பிப்பூரானட்டியல் 1
1787	6	10		தங்கமோதிரம் 1
1835	8	22	04	சிறுதங்கக்காப்பு சோடி 1
1876	11	10		கொப்புச்சிமிக்கி சோடி 1
1902	12	17		பழு பதசவுக்கமணிக்கோர்வை 1ல் மணி 29
1904	12	41		கைச்சங்கிலி 1
1907	12	8		நசி தோடு சோடி 1, கம்பி சுரை இல்லை
1955	15	40		பொன் தாலிக்கொடி 1
1972	16	15		பழைய பாதசரம் சோடி 1
1981	16	10		வளையல் 6
1992	17	20		சிறு தங்க அரைஞாண் 1
2001	18	20		வளையல் 8 பழுது
2025	20	22		கல் தோடு சோடி 1
2027	20	40	04	பொட்டுப்பிறையுடன் பொன் பின்னல்கொடி 1
2038	21	150		மணிக்கோர்வை 1ல் ம. 26
2062	22	20		கல்மோதிரம் 2
2072	22	10	[illegible]	ரு. வைத்த ½ பவுண் 2
2123	25	15		வெ. பழைய பாதசரம் விற்சோடி 1
2162	27	75		செடிக்காப்பு சோ. 1 முறி
2174	28	12		பூசாந்திரம் 1
2179	29	9		பழுதான தோடு சோடி 1
2202	30	32	04	பத பிறையுடன் பொன் திருக்கொன்றை மணிக்கோர்வை 1
2215	31	20		வெ. பழையபாதசரம்சோ1

விற்பனவு:— விபவருஷ வைகாசி 8உ திங்கட்கிழமை (21-5-28) காலை 8 மணி தொடக்கம் எடுபடாதநகை பிறகிலாக ஷெ கடையில் பிரசித்தஏலத்தில் விற்கப்படும்.

க. கதிர்காமத்தம்பி,
(Mis. 1200) வெசீல்மேன்தார்.

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ்சுரக்க மன்னன்,
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள்வாழ்க,
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்விமல்க,
மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலகமெல்லாம்.

Printed & published by Pandit V. T. Sambandhan for and on behalf of the Proprietors, the Jaffna Saiva Paripalana Sabai, at their Press, the Saiva Prakasa Press, Vannarponnai,